AIDS InfoNet www.aidsinfonet.org

# எச்ஐவியும் ஆபத்துகளை குறைத்தலும் (HARM REDUCTION AND HIV)

Fact Sheet Number 155

அத்தியாயம் 155

**ஆபத்துகளை குறைத்தல் என்றால் என்ன?**

ஆபத்துகளை குறைப்பது என்பது சட்டத்திற்கு விரோதமான போதை பொருள்களை எடுத்துக்கொள்வதை குறைக்காமல் அதனால் ஏற்படும் மோசமான விளைவுகளை தடுப்பதாகும்.

ஆபத்துகளை குறைத்தல் என்பது ஒருவர் நடவடிக்கையினால் அவருடைய உடல் ஆரோக்கியத்திற்கும் மற்றும் அவரைச் சார்ந்த சமுதாயத்தையும் பாதிக்கும் நடத்தையை மாற்றுவதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவது ஆபத்தை குறைத்தல் ஆகும்.

ஆபத்தை குறைக்கும் அதிகப்படியான பணிகள் போதை மருந்து பயன்படுத்துதலில் அதிக தொடர்புடையது. இந்த அத்தியாயம் எச்ஐவி மற்றும் போதை மருந்து பயன்படுத்துதலின் ஆபத்தை குறைப்பதை மையப்படுத்துகிறது.

**ஆபத்தை குறைப்பதற்கான சில வழிமுறைகள்:**

- போதை மருந்து பயன்படுத்துதலை முற்றிலும் குறைக்க முடியாது ஆனால் அதன் மூலம் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க முடியும். அரசாங்கமும் சேவை நிறுவனங்களும் ஆபத்தை குறைப்பதை முக்கிய நோக்கமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.
- சில போதை பொருள்கள் மற்றதைவிட பாடுகாப்பானது. அவைகளை பயன்படுத்தும்போது மற்றவைகளைவிட குறைவான பாதிப்புகளை உடையதாக இருக்கிறது.
- போதை பொருள்களை பயன்படுத்துவோர் தாங்கள் எடுத்துகொள்ளும் போதைபொருள்களின் பாதிப்புகளை குறைக்கமுடியும்.
- போதைபொருள்களை பயன்படுத்தாமல் இருத்தலே முடிவான நோக்கமாகும். ஆயினும் இதுவே போதைஊசி பயன்படுத்துதல் மற்றும் அதன் மூலம் ஏற்படும் இறப்புகள், நோய்கள் மற்றும் குற்றங்களில் இருந்து தடுக்க சிறந்த வழியாகும்.
- போதைஊசி பயன்படுத்துதலில் நீதிமன்றங்கள் மூலம் அளிக்கப்படும் தண்டணைகள் மட்டும் இந்த பழக்கத்தை குறைத்துவிட முடியாது பொதுசுகாதார முயற்சிகளோடு சேர்ந்து எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனைத்தரும்.
- போதை மருந்து பழக்கத்திற்கான சேவைகள் அவர்களை பற்றிய தவறான எண்ணங்கள் இல்லாததாக இருக்க வேண்டும். அவர்களை சேவைகளை பெற்றுக்கொள்ளும்படி வற்புறுத்தக்கூடாது.

**ஆபத்துகளை குறைப்பதின் செயல்கள்:**

போதை மருந்து பயன்படுத்துதலில் அபாயத்தை குறைப்பதற்கான சில செயல்கள் இதில் அடங்கியுள்ளன.

- பலவிதமான போதைப்பொருள்களும் அவற்றின் பயன்பாடுகளினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து போதைப்பொருள் பயன்படுத்துவோரிடம் கற்பித்தல்.
- பாதுகாப்பாக ஊசிகளை ஏற்றிக்கொள்வதை பற்றியும், அதிக அளவு போதைப்பொருள் எடுத்துக்கொள்ளும் போது ஏற்படும் ஆபத்துகளை பற்றியும் தகவல்கள் அளித்தல்.
- போதைபொருள் பயன்படுத்துவோரை சாதாரணமாக சில சேவைகளைப் பெறமாட்டார்கள் என்று கருதாமல் எச்ஐவி / எய்ட்ஸ் தடுப்பு முறையில் அவர்கள் முக்கிய பங்குவகிக்கின்றனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். போதைபொருள் பயன்படுத்துவோரின் சேவைகளுக்காக இயங்கிவரும் நிறுவனங்கள் ஒத்த நிலையான பங்களிப்பை ஆபத்துகளை குறைப்பதற்கான செயலில் பங்காற்ற வேண்டும். ஆபத்துகளை குறைப்பதலில் பலவித மாற்று வழிகளை பயன்படுத்தப் படுகிறது. இந்த முறைகள் ஆபத்துகளை குறைப்பதில் சரியான மாற்றாக இருக்கவேண்டுமே ஒழிய பிரச்சினைக்குரியதாக மாறிவிடக்கூடாது.
- ஹெராயின் அல்லது ஊசி வழியாக ஏற்றிக்கொள்ளப்படும் பியூர்பினார்பினுக்கு பதிலாக சப்லிங்குவல் பியூர்பினார்பின் மற்றும் அதிகளவு போதை மருந்தை எடுத்துகொள்வதற்கான சில மருத்துவ சிகிச்சையும் செய்யலாம்.
- போதைபொருள் பழக்கத்துக்கான மருத்துவ சிகிச்சை வாய்ப்புகளை கற்பிக்கலாம் மற்றும் பரிந்துரை செய்யலாம்.
- பயன்படுத்தப்பட்ட சிரின்சுகளுக்கு பதிலாக புதிய சிரின்சுகள் மாற்றிக்கொள்வதற்கும் அல்லது புதிதாக சிரின்சுகள் வாங்கிக்கொள்வதற்கும் ஊசி சிரின்சிகள் மாற்றிக்கொள்ளுதல் (NSEP-Needle Syringe Exchange Program) திட்டத்தை போதைபொருள் பயன்படுத்துவோரின் மத்தியில் ஊக்கப்படுத்தலாம்.
- போதைபொருள்களை பயன்படுத்துவதற்காக அவர்கள் வழக்கமாக எங்கு கூடுகிறார்களோ அங்கு "கட்டிகள் ஏற்படும்போது செய்யவேண்டிய வழிமுறைகள்" குறித்து களப்பணி அளிப்பது.

ஆபத்துகளை குறைப்பதற்கான வழிமுறைகளை ஊக்குவிப்பதற்காக பல ஆராய்ச்சிகள் உள்ளன. அவைகளில் ஹெராயின் / ஊசி வழியாக ஏற்றிக்கொள்ளப்படும் பியூர்பினார்பின் பயன்படுத்துவோருக்கு சப்லிங்குவல் பியூர்பினார்பன் மருந்தை மாற்றாக பயன்படுத்துதல் மற்றும் ஊசிகளை ஏற்றுவோர்க்கு ஊசிகளை மாற்றிக்கொளுதல் போன்றவை அடங்கும்.

**ஆபத்துகளை குறைப்பதற்கான நோக்கத்தை அடைவதற்காக அளவிடும் முறைகள்.**

- சட்டத்துக்கு விரோதமான போதைபொருள்களை பயன்படுத்தாமல் இருப்பதை ஊக்குவித்தல்.

- சட்டத்துக்கு புறம்பான போதைபொருள்களை ஊசி மூலம் செலுத்தாமல் இருப்பதை ஊக்குவித்தல்.
- போதைபொருள் பயன்படுத்துவோரிடையே அவர்கள் மருந்துகளை ஏற்றிக்கொள்ளும் உபகரணங்களை பகிர்ந்து கொள்ளாமல் குறிப்பாக ஊசி மற்றும் சிரின்சுகளை பகிர்ந்து கொள்ளாமல் இருக்கச் செய்தல்.
- போதை மருந்து ஏற்றிக்கொள்ள பயன்படுத்தும் உபகரணங்களை பகிர்ந்து கொள்ள நேரிடும் போது உபகரணங்களை ஒவ்வொரு முறை பயன்படுத்தியப்பிறகும் கறை நீக்கிகளை கொண்டு சுத்தம் செய்து அதை குளிர்ந்த நீரில் கழுவியபிறகே பயன்படுத்தச்செய்தல்.

**எச்ஐவி யும் ஆபத்துகளை குறைத்தலும்:**

எச்ஐவி போன்ற பல பாதிப்புகள் போதைபொருள் பயன்படுத்துவதால் ஏற்படுகிறது. அத்தியாயம் 154 ல் எச்ஐவி மற்றும் போதை பொருள் பற்றி மேலும் அறியலாம்.

- போதை மருந்து ஏற்றிக்கொள்ள பயன்படுத்தும் உபகரணங்களில் சிறு அளவில் கூட பாதிக்கப்பட்ட இரத்தம் இருந்தாலும் அதன் மூலம் எச்ஐவி, ஹெபடைடிஸ் மற்றும் இரத்தம் மூலம் பரவும் நோய்கள் பரவு வாய்ப்பு உள்ளது.
- போதைப்பொருள் பயன்படுத்தும்போது அது பாதுகாப்பற்ற உடலுறவுக்கு வழிவகுக்கும், இதன் மூலம் எச்ஐவி பரவும் ஆபத்து அதிகம்.
- மேலும் இது எச்ஐவி சிகிச்சையை சரியாக எடுத்து கொள்ள முடியாத சூழ்நிலையை ஏற்படுத்தி அதன் மூலம் நோயின் தாக்கத்தை அதிகப்படுத்தும்.
- தீவிரத்தை குறைக்கும் நடவடிக்கைகளில் போதைப்பொருள் பயன்படுத்தும்போது அது எவ்வாறு எச்ஐவி தொற்று ஏற்படும் ஆபத்தை அதிகரிக்கும் என்பதைப் பற்றியும், பாதுகாப்பற்ற உடலுறவு பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தல். அத்தியாயம் 151 ல் பாதுகாப்பான பாலுறவுகள் பற்றிய தகவல்களை மேலும் அறியலாம்.

**ஆபத்துகளை குறைப்பதில் ஏற்படும் சவால்கள்:**

போதைப் பொருள் பயன்படுத்துதல் மற்றும் அதன் விளைவுகள் பெரும் சவால்கள் ஆகும். இவை சிகிச்சை அளிக்கும் நிபுணர்கள், சட்டத்தை வலியுறுத்தும் நபர்கள், பொதுநல சுகாதார நிபுனர்கள், சீர் செய்யும் வல்லுநர்கள் மற்றும் போதைப் பொருள்கள் பயன்படுத்துவோர் இணைந்து செயல்படவேண்டும். போதைப்பொருள் பயன்படுத்துவோரை கைது செய்து தண்டனை அளிப்பதை விட அதற்கான சிகிச்சை அளிக்கவேண்டும் என்பதையே வலியுறுத்துகிறது. இது மேலும் போதைப்பொருள் பயன்படுத்துவோரின் பிரச்சினைகளுக்கு அவர்கள் மீது சட்டரீதியாக தண்டனை அளிப்பதை விட, பொது சுகாதாரப் பணியாளரை அவர்களுடன் வேலை செய்ய வைப்பதே சிறந்ததாகும். போதைப்பொருள் பயன்படுத்தி அதன் மூலம் சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவோர் குறிப்பாக மற்றவர்களை துன்புறுத்துதல், திருடுதல், கொடுஞ்செயல்கள் மற்றும் போதையில் வாகனம் ஓட்டுதல் போன்ற செயல் புரிபவர்களுக்கு சட்டரீதியாக தண்டனை அளிக்கலாம். பல சமுதாயங்களில் போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் மீது சட்டரீதியாகவும் மற்றும் அவர்களின் ஆபத்தை குறைப்பதையும் இணைந்து செயல்படுத்துகின்றன. போதைப்பொருள் பயன்படுத்துவதில் பொதுசுகாதாரத்துறையில் பாலிசி குறித்து வழக்காட்டுதல் இரு முறையில் நடைபெருகிறது. இன்று இது மரபுக்கு எதிரானது என்றும் மற்றொன்று சட்டத்தை அமலாக்கப்படுத்துவதாகும்.

**போதைப்பொருள் பயன்படுத்துவதின் ஆபத்துகளை குறைப்பது சட்டரீதியானதா?**

ஆபத்தினை குறைப்பதில் சில பகுதிகள் சட்டரீதியாக இருக்கிறது. போதைப்பொருள் பயன்படுத்துவோர் சப்லீங்குவல் பப்ரிநார்பின் அளிக்கும் திட்டம், போதை மருந்துகளை பயன்படுத்தும்போது பாதுகாப்பாக இருத்தல், கட்டிகள் பராமரிப்பு முறை, ஊசிகள் சிரீன்சுகள் மாற்றிக்கொள்ளுதல், சிகிச்சைக்காக பரிந்துரை செய்தல் போன்ற திட்டங்களின் மூலம் தகவல்களை அளித்து வருகின்றனர். மக்கள் பாலுறவுகள் மூலம் எச்ஐவி தொற்று ஏற்படுத்துவதற்கான ஆபத்தை குறைக்கும் தகவல்களையும் பெறுகிறார்கள். மற்ற நிலைகளில் ஆபத்தை குறைப்பதற்கு சட்டங்களை மாற்றுவதும் அல்லது சட்டங்களை அமலாக்குவதும் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக பொதுசுகாதாரத்தை கருத்தில் கொண்டு தற்போது இருக்கின்ற சட்டத்தில் சிலவற்றை தவிர அதை பயன்படுத்தி ஊசி மற்றும் சிரின்சுகள் மாற்றிக்கொள்ளும் திட்டம் நடைபெறுதல் அவை உள்ளூர் சட்ட அமலாக்கல் அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது.

**அடிப்படை வரையறைகள்:**

ஆபத்தை குறைப்பது என்பது ஒரு நபருக்கும் அவருடைய சமுதாயத்திற்கும் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளை குறைக்க உதவும் ஒரு பொதுசுகாதார முறையாகும். ஆபத்தை குறைப்பதற்கான செயல்பாடுகள் சிலவற்றில் சில சட்ட நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆபத்தை குறைப்பது என்பது அந்த தீங்கு நடவடிக்கைகளை விலக்குவதை விட அந்த நபருடைய ஆரோக்கியத்தையும் அந்த சமுதாயத்தையும் ஆரோக்கியமடையச் செய்வதாகும் இதுவே முதன்மையான நோக்கமாகும். ஆபத்தை குறைக்கும் நடவடிக்கைகள் எச்ஐவி தொடர்பான தொற்றுகளை போதை மருந்து பயன்படுத்துவதன் மூலம் அல்லது பாதுகாப்பற்ற உடலுறவுகள் மூலம் ஏற்படுவதை குறைப்பதுதான் முதன்மையானதாகும்.

**மேலும் தகவல்களுக்கு:** ஆபத்தை குறைக்கும் நடவடிக்கைகள் பற்றிய மேலும் தகவல்களை கீழ்காணும் இணையதளத்தில் பெறலாம்.

www.inhrn.org,
www.ahrn.onet,
www.unodc.org/india ,
www.harmreduction.org

A Project of the New Mexico AIDS Education and Training Center. Partially funded by the National Library of Medicine
Fact Sheets can be downloaded from the Internet at http://www.aidsinfonet.org